358

மலர்-2.

உ

குகன் துணை.

தொண்டமாநத்தம்

# ஸ்ரீ தெண்டாயுதபாணி

# அருட்பாமாலை.

OCT 1932

சென்னை - சூளை,
"பாரதி" அச்சுக்கூடத்தில்
ப்பிக்கப்பட்டது.
1932.

Q26:417
N32
170103

உ

குகன் துணை.

கூடலூர். O. T. தொண்டமாநத்தம் வாழ்

# ஸ்ரீ தண்டாயுதபாணி

# அருட்பாமாலை.

20 OCT 1932

இஃது

ஸ்ரீ தண்டாயுதபாணிசுவாமி அன்பரான

தொண்டமாநத்தம்

**M. K. கோவிந்தசாமி படையாக்ஷி**

அவர்களால் இயற்றப்பெற்றதை

அச்சை கோத்தராஜாவிலிருக்கும் சிதம்பரம் தாலுக்கா,

பரதூர். P. பக்கிரி அவர்கள்

பொருளுதவியைக்கொண்டு

தொண்டமாநத்தம்

M. K. ஆறுமுகபடையாக்ஷியாரால்

வெளியிட்டு வினியோகிக்கப்பட்டது.

1932

170103

# முகவுரை.

**கண்ணேணுக்கு மீடமேல்லாம் கடவுள் காப்பு**

என்றபடி முற்காலத்தில் அடியார்கள் ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமியை தியானித்து முக்திபெற்றார்களென்பதை ஆன்றோர்களால் மொழியக் கேழ்வியுற்ற நாங்கள். சுமார் 15-ஆண்டுகளுக்கு முன்னிருந்து எமது வீட்டுக்கொல்லை தோட்டத்தில் ஸ்ரீ தண்டாயுதபாணிசுவாமியை வைத்து உபாஸனையாகக் கொண்டொழுகி வருங்கால் சென்ற பிரஜோற்பத்தி௵ பங்குனி உத்திரத்துக்கு எனது தமையனார். M. K. ஐம்புலிங்கபடையாக்ஷியாரால், திருவாவினன்குடி என்னும் பழனிக்கு செலுத்துவதாக இருந்த பாற்காவடியை இங்கு செலுத்தும்படி உத்திரவானதுடன். பழனி ஸ்தல சித்துகளை இங்குகாட்டுவோம், என்ற உத்திரவுபடி ஆங்கீரீஸ௵ சித்திரை௴ 1௳ காவடி மஹோற்சவம் நடந்தது. அதுமுதல் அனேக அன்பர்கள் வினைகளும் நீங்கி வந்துக்கொண்டிருக்கின்றனர். பிறகும் ஆங்கீரஸ௵ ஆடி௴ 12௳ கார்த்திகை நக்ஷத்திரதினம் உத்திரவுபடி நாக்கையருத்து. பாவடமிடவள்ர்ந்தும் அனேக சித்துகள் நடக்கும் ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமியை வித்வத்துக்குரிய இலக்கிய இலக்கணம் இன்னதெனவே அறியாத என்னால் பாடுவதென்றால் முடியாத காரியமாக இருந்தும், அன்னவரால், பாமாலை பாடும்படி எனக்கு உத்திரவானமையால் அவர் அருளைப் பெற்று முன் பாடி வெளிவந்த ஸ்ரீ தண்டாயுதபாணி தியானங்கள் என்ற 1-வது மலரும் இரண்டாவதாக இப்போது சில பாடல்களை இயற்றி இதற்கு ஸ்ரீ தண்டாயுதபாணி அருட்பாமாலை என்ற திருநாமமிட்டும் வெளியிட துணிந்தனன். இதில் எக்குற்றமிருப்பினும் ஹம்ஸபக்ஷியானது பாலை யருந்தி நீரையகற்று மாப்போல் குற்றத்தை நீக்கி ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமியை தியானித்து அன்னவரருளைப்பெற்றுய்யுமாரு நமஸ்கரித்து கேட்டுக்கொள்கிறேன். ஸ்ரீ தண்டாயுதபாணிசுவாமி உத்திரவுபடி இந்நூல் அச்சிட பொருளுதவிபுரிந்த அச்சை, கோத்தாராஜாவில் இருக்கும் சிதம்பரம் தாலுக்கா பரதூர் பெருமாள்பண்டிதர் குமாரர் பக்கிரி பண்டிதருக்கும் ஆண்டவனருள் புரிவாராக.

8-8-32 } இங்ஙனம்: அடியாற் கடியேன்,
தொண்டமா நத்தம் } **M. K. கோவிந்தசாமி.**

2576
[illegible] [illegible]
N 2

உ

வேலுமயிலுந்துணை.

தோண்டமாநத்தம் வாழ்

ஸ்ரீ தண்டாயுதபாணி

# அருட்பாமாலை.

## ஸ்ரீ ஏகதந்த விநாயகர் துதி-வெண்பா.

1 சிவசத்தி பாலகனும் தேவன் தண்டாயுதனை
தவமுத்தி தந்திடவே தாரணியில்—பவந்தீர்த்
தாண்டிடுக போற்றி யருள் மாலை பாடுதற்கு
வேண்டினேன் ஏக தந்த வா.

### விருத்தம்.

2 திருமாலின் சோதரி சிவசத்தியம்பிகை
செல்வமே கருணை யுருவே
அரிவோ மய்யுங் கிலியுஞ் சவ்வுமாகியகங்
கணபதி யான பொருளே
சிரியேனின் பிழைநீக்கி தேவனே யாண்டிட
தேடினேன் மூஷிகமதில்
வருவாயே என்னெதிர் வள்ளலே ஓம் ஏக
தந்த விநாயகக்கடவுளே

### ஸ்ரீ தண்டாயுதபாணி துதி.

3 ஆவினங்குடியா மழகுரு பழனி
அருள் தரு சித்தது போல
மேவியே யிங்கு காட்டுவோ மென்ற
மேன்மையும் முறை தமை யெண்ணி
கூவியே கதரும் குழந்தையாமெங்கள்
குறை தனை தவிர்த்திட மயிலில்
தாவியே வருவாய் தோண்டமாநத்த
தண்டாயுதபாணி யெம் தேவே.

### ஸ்ரீ தண்டாயுதபாணி வருகைமாலை விருத்தம்.

1 முத்தையா சுப்பையா முருகா வாவா
மூர்த்தி சிவ குரு நாதா முன்னே வா வா

பத்திக்கு யருள் தருகும் பரனே வா வா
பழனி மலை யரசே நீ பார்க்க வாவா
கத்திடுகு முறைகேட்டு கந்தா வாவா
கருணைமழை பொழிந்திடுகு கண்ணே வாவா
சத்தி சுதா தொண்டமாநத்த மேவும்
தண்டாயுதபாணியே நீ சடுதி வாவா.

2 வாலைமனோன்மணியீன்ற மைந்தா வாவா
வையகத்தில் புகழுங் கலிவரதா வாவா
வேலேந்தும் நாயகனே வித்தே வாவா
வேதனையடைத்த சுடர் விளக்கே வாவா
பாலகன் தன் துயரதீர பரமே வாவா
பச்சை மயிலேரியிங்கு பரந்து வாவா
தாலமதில் தொண்டமாநத்த மேவும்
தண்டாயுதபாணியே நீ சடுதி வாவா.

3 அரஹரா ஆறுமுக அழகே வாவா
அசுரர்குடி கெடுத்தவனே அய்யா வாவா
திரிபுரபவனே செந்தூரா வாவா
திகழொளி பவனே நீ சிறந்து வாவா
பரிபுரபவனும் நீ பழனி வாவா
பவமொளி பவனே நீ பாலா வாவா
சரஹண தொண்டமாநத்த மேவும்
தண்டாயுதபாணியே நீ சடுதி வாவா.

4 குகனே பன்னிரு கரனே கோனே வாவா
குன்றெரிந்த வேல் முருகா குமரா வாவா
இகபரத்துக்கனுகூல யீசா வாவா
எழை யெனக்கருள்புரிய யிரங்கி வாவா
அகயிருளை நீக்கிடுகும் அரசே வாவா
ஆனந்தமாய் நிறைந்த அத்தா வாவா
சகம்புகழும் தொண்டமாநத்த மேவும்
தண்டாயுதபாணியே நீ சடுதி வாவா.

5 அப்பாவா அரசேவா அண்ணாவாவா
ஆறிருதோள் புயவழகு அய்யாவாவா
இப்போ வா இங்கேவா யீசா வாவா
என்முறையை கேட்டுமே நீ யிரங்கிவாவா

சுப்பாவா சுகமேவா சுவாமிவாவா
சுந்திரமே ஜோதியொளி சுரூபா வாவா
தப்பில்லா தோண்டமாநந்த மேவும்
தண்டாயுதபாணியே நீ சடுதி வாவா.

6 வாவாவா வாவென்றே வழைக்கமுன்னம்
வருகாம லிருப்பதற்கு வழக்கேதுண்டோ
கூவுமுறை கேட்கலியோ குழந்தை யென்மேல்
கோபமேதோ சரியோ குமரவேளே
சேவல்கொடி வேலுடனே மயிலிலேரி
சிறியேனின் பிழை நீக்கி அடியேனென்முன்
தாவியே தோண்டமாநந்த மேவும்
தண்டாயுதபாணியே நீ சடுதி வாவா.

---

## வேறு சந்தம்.

1 ஆதியாம் சிவஞானந்தவல்லி
யகமே மகிழு குமரா
வாதியோனுன் தான் வஞ்சமொ ஐயா
வாடிடு மெந்தனை தானே
சோதனை செய்வ திதுவழகாமோ
துயர்படு ஏழையாமடியேன்
வேதனை போக்க மயிலதில் வருவாய்
வேலொடு தணடாயுதக்காரனே

2 அலைதொட்ட உலகிலனுவான மனித
ருருவாகிவந்து வடியேன்
வலைபட்டமானின் துயர்பட்டு நாளும்
வாடித்தயங்கலழகோ
பலமிட்ட சூரர் தலை கெட்டுமாள
வடிவே லெடுத்த வரசே
தலமிட்டு தோண்டநகர் வாழுமெங்கள்
தண்டாயுதனே வருவாய்.

3 என்னென்ன ஜென்மமெண்ணாத கோடி
எடுத்தேனோ எது மறியேன்
இன்னமுங்கருவிலுருவாய் ஜெனித்து
யீயாத லோபி வஞ்சகராய்

அன்னமு மின்றி ஆராதநோயாம்
அரும்பிணிவாய் படாதாள
வன்னமா மயிலிலேரியே வருவாய்
வள்ளலே தண்டாயுதபாணி.

4 வள்ளலே வாவாவடிவேற் கொள் நாதா
வந்துமேயாளென அழைத்தும்
கள்ளமோ இன்னும் கர்த்தனே சரியோ
கந்தனே யீதுனக்கழகோ
பிள்ளையாம் யானும் பிழைபலபுரினும்
பொருத்தித சமயமே மயிலை
தள்ளியே நடத்தி சடுதியில் வருவாய்
தண்டாயுதபாணி என்தேவே

5 ஊசிதன் முனையின் சிறுதுளி பெருகி
உருண்டது திரண்டுருதானே
நாசிவாய் கண்ணுஞ் செவியென தலையாய்
நாடிடு முடலுருவாகி
பேசிடும் பஞ்சபூதமும் புகுந்து
பிரட்டலு முருட்டலுஞ் செய்து
வேசமே நீக்குங் காலமே வந்து
வேலனே யாள் தண்டாயுதனே.

6 கடல்பட்டயலையினிடம் பட்டதுரும்பாய்
கசடனேனுளுமே குடும்ப
இடர்பட்டு நொந்து என்னேரம் வருமை
என்றிடும் முதலைவாய் கிட்டி
விடுபட்டு மீளவழியின்றி உன்னை
வேலவாயா ளெனகதரும்
தடம் பட்டு வந்து தோண்டமாநத்த
தண்டாயுதபாணியே கார்ப்பாய்

7 இது நாளாய் பட்டதுயர் போதுமினியு
மெளியேனுல் படுகமுடியா
திதுகண்டு வெளியேன் படுந்துன்பம் தீர்த்து
யீராறு கையனே மயிலில்
இதுவேளை வந்து எனை யாண்டுகொண்
டுன்னிணை யிலாபதமதை காட்டி

இதுவேளைகாக்ஷி தந்திடவருவாய்
யீசனே தண்டாயுதபாணி.

8 அன்னையின் வயிற்றில் கருவுருவாகி
அளவிலா நரம் பெலும் பிடையால்
பின்னியே நெருங்கி மலஜலமுண்டு
பேசிடுமொருபத்து மாத
இன்னலும் பட்டு இப்புவிவந்து
இதுவரையடைதுயர் குறைவோ
வன்னமாமயிலிலேறியே வருவாய்
வள்ளலே தண்டாயுதக்காரனே.

9 பித்தது கொண்ட வெறியனை பின்னும்
பேய்பிடித்தாட்டிடி லென்னே
அத்துரைபோல அறிவிலா மூட
அரும்பாவியாமெனை குடும்ப
புத்ததிலெழுந்த அரவமாம் சுற்ற
பிடுங்கலில் தீயெனும் வருமை
பற்றிடாதாள மயிலதில் வருவாய்
பரமனே தண்டாயுதபாணி.

10 ஒன்ருய் சிறந்து பலவாகி வந்து
ஓராறெழுத்தின் வுருவாய்
குன்றுதயீசன் குருநாதனென்ற
கோனுகி நின்ற பொருளே
இன்ரே பின்னென்ரே எமன் தூதரோடு
எனைகொண்டு போகவருமுன்
நன்ருனசேவை தந்தென்னையாள
நல் தண்டபாணி வருவாய்.

---

## இவை வேறு சந்தம்.

1 முருகா குமர குரு பரனே
முத்தியளிக்கு முழுமுதலே
வருவாய் வள்ளிதெய்வானை
வடிவேல் சேவல் கொடியுடனே
அருகாய் மயிலை நடத்தி யிங்கு
ஆறுமுகத்தோடன் புடனே

தருவாயருளை தொண்டநகர்
தண்டாயுதபாணித் தேவே.

2 ஆனைமுகனுடைந்து முகன்
அரியும் வாலை தேவரெலாம்
கோனே வுருவில் நீ யென்று
கோரி நாளும் துதித்திடுகெ
ஏனோ என்னை யாண்டு இந்த
ஏழை முகத்தை பாராது
தானே இருந்தால் கார்ப்பவரார்
தண்டாயுதபாணித்தேவே.

3 வேலாயுதனே தேவர் புகழ்
வேதன் தன்னை சிறையடைத்த
சீலா பரம குரு பரனே
தெய்வயானை வள்ளியர் தன்
லோலா வாவா எனக்கூவ
ஓடிவருகா திருப்பதுவும்
மேலோயிதுவும் தொண்டநகர்
மேவுந்தண்டாயுதக்கரனே.

4 அன்னை தந்தை குரு தெய்வம்
அகிலத்துற்ற பொருளெல்லாம்
உன்னையன்றி யிலையெனவே
வுலகிலெண்ணி யேங்கிடுகும்
என்னையணைத்தேயிதங்கூர
யேழை முன்னே மயிலில்பிர
சன்னமாகி வரவேணும்
தண்டாயுதபாணித்தேவே.

5 அப்பா அரசே ஆறுமுக
அழகே குமர குருபரனே
எப்போவருவாய் எனக்கருள
யீசன் விழிவந்திடு மிறையே
தப்பாதுனையே நினைந்தழுது
தவிக்கு மேழை தனக்குரிதி
செப்பியாண்டால் குறையேதோ
தேவா தண்டாயுதபாணி.

6 கந்தா வந்தாளென வழுது கதரும்
கடையே னெனது முனம்
வந்தாலுன்னை கேட்பவரார்
வழியிற் றடையும் குறையேதோ
எந்தாவுன்னாலெந்தனுக்கு
எல்லா சுகமும் பெருமையுண்டு
இந்தா என்னுலேதுளது யீசா
தண்டாயுதபாணி

7 நம்பிதுதித்த தேவருக்காய்
நாடாவசுரர் பூண்டொழித்து
கும்பமுனிக்கு யருள் சுரந்து
கோருந்த மிழைதந்தவனீ
வெம்பி வெம்பிதுதிக்கு மிந்த
வேழை முகத்தைபாராது
சம்பிரமுடனே யிருத்தலுமுன்
தயவோதண்டாயுதபாணி.

8 பழனி செந்தில் கதிர்காமம்
பரங்குன்றேடு தணிகைபல
கழனி சூழும் தலமமர்ந்து
கந்தா தொண்டநகர்தனிலே
அழகாமயின் மேலாடல் செயு
மாறுமுகத்து பெருமானே
குழகாவள்ளி தெய்வானை
கோனே தண்டாயுதனேவா.

9 காலமெல்லாம் நின்னடியை
காணமுயன்றே வீடு பொருள்
மேலுந்தேடாதுண்டு ரங்கி
மெத்த வருமைபட்டுழன்றேன்
நீலமயின்மேல் வந்தென்னை
நீயேயாளா விட்டிடிலோ
சாலவுன்மேல் பழிவருமே
சரியோ தண்டாயுதபாணி.

10 ஆக்ஷிபெருத் தேவுலகுக்கும்
அமரர் தமக்கு மிடுக்கமுற

சூக்ஷிபெருத்த சூரர் தமை
துடிக்கவேலால் புடைத்தவனே
காக்ஷியளிக்க காரணமேன்
கண்ணுருனக்கு வந்திடுமோ
தாக்ஷியுண்டோ தொண்டநகர்
தண்டாயுதபாணித்தேவே.

11 கூவும்சேவல் கொடியிலங்க
கோலம் மயில்மேல் வருவோனே
பூவிலன்பர் நோயெல்லாம்
புனித நீராமருந்தளித்து
மேவிடாது கார்த்தாண்டு
மெல்ல நாக்கை பாவடமாய்
தாவியநத்து போட்டிடுக
தானே வளர்த்தாய் தண்டாயுதனே.

12 துஷ்ட அசுர யிடும் பன்மலை
தூக்கி வருக அமர்ந்தழித்து
கஷ்டமடைந்த கன்னியர்க்காய்
கருணைகாட்டி எழுப்பியேபின்
இஷ்டனுக்கி யாண்டிட்ட
இறையே எளியேன் பிழை நீக்கி
பக்ஷசங்காட்டி யருள் தருவாய்
பரமே தண்டாயுதபாணி.

13 சீதக்கமலத்துதித்தவனின்
சிரசிற்குட்டி சிறையடைத்து
வேதமுதலாம் சிவன்காதில்
விரித்து மறையை யுரைத்தவனே
பாதகன்றன் துயர்தீர்த்து
பாலாயஞ்சேலெனவாண்டு
ஆதரிப்பதுன்பாரம்
அரசே தண்டாயுதபாணி.

14 ஆலும்பழுத்தால் பரவை கட்கு
ஆளும் சீட்டு முண்டோ போற்
பாலனுனும் பக்தியதிற்
பழுத்தால் வருவோ மெனவெண்ணி

காலம் பார்த்து இருப்பதற்கும்
கடையேனதற்கு பாத்திரனே
தாலமீது எனைகார்த்தாள்
தண்டாயுதபாணித்தேவே.

15 கையைப்பார்க்க கண்ணாடி
கதிரைப்பார்க்க ஆள் துணையும்
ஐயனம்மை எனக்காட்ட
அதற்கு சபையு நீதியுமேன்
வையமீது மழையின்றி
வருந்தும் பயிர்போல் வாடுமிந்த
பையலெனக்கு பிரவியெனும்
பயந்தீர்த்தாள் தண்டாயுதனே.

16 நாலாருடனேவோரு நான்கில்
நானே கண்ட அனுபவத்தை
வேலாயுனை யன்றியெவர்
விளம்ப நேசரெனக்குண்டு
மேலாஞ் செல்வம் வருங்காலை
மேன்மை காணேன் வருமைவரில்
சீலாவுனை துதித்திடுகை
சிந்தை வருதல் தெளிந்தேனே.

17 மாதா வுதிரக்கருவாகி மண்ணில்
தவிழ்ந்து நடந்திடுநாள்
நாதா மதனுக் காளாகி
நாளும் வெட்கி வெட்கி பெண்டு
தீதாம் சாகரந் தனிலே
தெரியாதிரங்கி படும்பாடு
நீதானரிந்து நேரில் வந்தாள்
நேசா தண்டாயுதபாணி

18 பாழும் பிரவி எடுத்திந்தபாரில்
பெண்டு பிள்ளை பொருள்
வாழுமாசை தனிற்பட்டு
வருந்தி வருந்தியிளைந்தந்தோ
ஆழுந்துன்பம் சகியாது
அப்பா துதித்தேன் மயில்சேவல்

சூழும்துரையே ஆள்ஞான
சுகமே தண்டாயுதபாணி.

19 தண்டாயு தனைக்காணமல்
தவித்தேபுவியில் வேத துயர்நான்
கொண்டேனவனும் மனமிரங்கி
குழந்தையுநவா யெனையழைக்க
கண்டேன் மேனி மயிர் பொடிப்ப
கரத்தை கூப்பியவர்பதத்தில்
தண்டேபோலே வீழ்ந்தேனன்
தடவியணைத்து நிருத்தினனே.

20 நின்ற வென்னை யருகாக
நேசாவமருமெனவமர்த்த
குன்றுபாசங் குன்றியது
கூராதோடகண்டனன்னன்
பின்றானதுவுந் தொடராமல்
பெருமானனுமென வுரைத்தேன்
வுன்றய் போல நானிருக்க
வுனக்கேன் துயரமெனத் தெளிந்தேன்.

21 தெளிந்தேன் வீடு பெண்டுபொருள்
சீராயளித்தால் நமன் வருங்கால்
களைந்தேபோகும் பேய் நரி நாய்
கழுகுமிழுக்கு மக்காலம்
மலிந்தே யிருக்கு மிக்காலம்
மனமு நடுங்க சுற்றத்தார்
விழுந்தே பிடுங்கி கொல்லுகிறார்
வேலா ஆள்வதுன் கடனே.

22 கழுதை காதிலுபதேசங்
கழுறுமாப்போல் பாவியெனை
அழுதிடாதே யெனத்தொட்டும்
அணைத்தே யாண்டும் மூடமனம்
நழுவிடாது வாட்டுதையோ
நாதாஞான குருமணியே
பழுதிலாது ஆள்வதுந்தன்
பாரம் தண்டாயுதபாணி.

23 கண்ணுந்தெரியா இருளதனில்
காலால் அரவந்தனை மிதிக்க
நண்ணுயதுவுங் கடியாமல்
நாதா வாலால் விசிரியென
மண்ணே நடக்க விட்டதுவும்
மாசிலாத குணக்குன்றும்
தண்ணே தண்டாயுதபாணி
சத்தேயுந்தனருளன்றே.

24 ஆராவமுதே அருட்கடலே
அரசே அறுமாமுகக்குருவே
வாராயெனவு மழைக்க
வகையறியாயேழை தனைக்காயுன்
பேரா முருவை மறைத்து சிறு
பிள்ளையுருவாய் கனவதனில்
சீராயஞ்சேலென ஆண்ட
சித்தே தொண்ட நகரானே.

---

## ஆனந்த களிப்பு

1 சத்துருசம்மாரவடி வேல் வேல் சிவ
தண்டாயுதபாணி நெஞ்சமகிழ் வேல் வேல்
முத்துக்குமரசாமி வேல் வேல் வரு
முருகசரஹண பவானந்த வேல் வேல் (சத்)

2 சித்திர ரத்தின தங்க வேல் வேல் ஜெக
மெங்கினும் புகழ்ந்திடுகு மங்களநல் வேல் வேல்
..த்திக்கருள் புரியும் வேல் வேல் குகன்
பன்னிருகரமதனை உன்னிதஞ்செய் வேல் வேல் (ச)

3 சங்கரிதிகம்பரியின் வேல் வேல் நம்பி
சந்ததந்துதிக்க வரந்தந்திடுகும் வேல் வேல்
கங்கையிலுதித்த வன்றன் வேல் வேல் ஆளும்
கார்த்திகேயன் கையதனில் நேர்த்திமிகும் வேல்வேல்()

4 சூரபத்மனை யழித்த வேல் வேல் துஷ்ட
சிங்க முகன்தாருகனை சங்காரங்கொள் வேல் வேல்
வீரவாகு இஷ்டமான வேல் வேல் எந்த
வேளையும் பாலனைகார்க்கும் சீலமான வேல் (ச)

5 அசுரரை அழிக்கவந்த வேல் வேல் தினம்
அந்தரர் புகழ்ந்திடுங் கந்தசாமி வேல் வேல்
முசுகுந்தர்க்கருள்புரிந்த வேல் வேல் திரு
மூர்த்தியுருவாகி எங்கும் கார்த்திடுகும் வேல் வேல் (ச)

6 இடும்பனை யடக்கி யாண்ட வேல் வேல் என்றும்
இஷ்டனாக கொண்டுமிக பக்ஷசங் காட்டும் வேல் வேல்
கடம்பனும் காங்கேயன்கர வேல் வேல் நாம்
காக்ஷிபெற ஆக்ஷியாகி மோக்ஷசந்தரு வேல் வேல் (ச)

7 காவடியிலாடிவரும் வேல் வேல் எனை
காருமென்ற கிரனுயிர் பாரில்தந்த வேல் வேல்
சேவலைக்கொடியாய் கொண்ட வேல் வேல் கானின்
சித்திர மயிலிலேறி நித்தம்வரு வேல் வேல் (ச)

8 அரகரா வெனபுகழும் வேல் வேல் எல்லாம்
ஆனந்தமாகி எங்குந்தானான வேல் வேல்
சராசர மெங்குந் துதிக்கும் வேல் வேல் ஓம்
சண்முகா வெனவழைக்க முன்னம் வரும் வேல்வேல்(ச)

---

## ஆசிரிய விருத்தம்.

கந்தப்பனும் எந்தன் சொந்தப்பனே வுந்தன்
கருணையானந்த சமுகம்
கசடனேன் விண்ணப்ப மதுவொன்று கேட்டுநீ
கர்த்தனே யருளவேண்டும்
எந்தவிதமாகிய பிழை செய்திருந்தாலும்
எல்லாம் மன்னிக்கவேண்டும்
எதுவிதகாரண வாதுகள் கூராது
இதுவேளை மயிலிலேறி
செந்தாமரைப்பதம் தந்திந்த மக்கட்கு
தேறுதலை கூறவேண்டும்
சித்தனே வுன்துதி நித்தமென் நெஞ்சமதில்
சீராக நிற்கவேண்டும்.
தந்திந்தவரமெலாம் எந்தநேரத்திலுநான்
தளராமல் செய்யவருவாய்
சத்தியமிகு தொண்டமா நத்தநகர் வாழ்ந்திடும்
தண்டாயுதக்கடவுளே.

170103

## சத்துரு சங்காரமாலை.

1 அருமறைக்கு மெட்டாத சிவனார் நெற்றி
அக்கினியிலெழுந்து சரஹணையிலாறு
திருவுருவாய் வந்துசத்தி யெடுக்கும்போது
சிறந்துருவ மொன்றாறு முகமுமாகி
பிரவணத்தையரன் காதிலுபதேசித்த
பெருமானே மனதிரங்கி யடியேன்முன்னே
தருணமிது தொண்டமாநத்த மேவும்
தண்டாயுத பாணியே யென்துணையாய் வாவா.

2 எங்குநிறை சிவபெருமான் தந்தையானார்
ஏகதந்த விநாயகனார் தமையனானார்
சங்கரி திகம்பரியுன் தாயுமானாள்
சதுர் முகனுமுன தருமை அத்தானானார்
செங்கருடவாகனனு மம்மானானார்
சீரான நவவீரர் துணைவரோடு
தங்கியென்றும் தொண்டமாநத்த மேவும்
தண்டாயுத பாணியே யென்துணையாய் வாவா.

3 தேவர்கள்தன் துயர்தீர்க்க அசுரர்பூண்டை
சிந்தாது அழித்தவனே அய்யாஇப்போ
பூவுலகிலெனக்கு வஞ்சனைகள்சூது
புரிந்திடுகு மனிதர்முதல் காளிகூளி
காவலர்ஜடாமுனி காட்டேரிபேயை
தண்டித்து வேலாலே விலக்கியாண்டு
தாவியே தொண்டமாநத்த மேவும்
தண்டாயுத பாணியே யென்துணையாய் வாவா.

4 அப்பனேமுருகா வென்றழைக்க முன்னம்
அருப்புண்ட கரம்வளர கார்த்தநீயே
செப்பிடுவேன் காச்சலோடு தலைநோய்ஜன்னி
சீழ்குத்தல்கட்டி அரையாப்புகுட்டம்
ஒப்பில்லா விஷமுதலாய் பலநோய்கட்கும்
உனைநினைந்தே நீரள்ளி பூசஆண்டு
தப்பில்லா தொண்டமாநத்த மேவும்
தண்டாயுத பாணியே யென்துணையாய் வாவா.

5 அஞ்சலென்ற கிரனுயிர் கார்த்தவேளே
அவனிதனில் பூர்வவினையானகர்ம
வஞ்சியர்தன் ஜெகஜால தளிக்கினேடு
வன்னபொருள் தேகமெனும் பாசப்பட்டு
பஞ்சுபடும் பாடடியேன் படுகாதுன்னை
பலகாலும் போற்றுமதி தந்தேயாள
தஞ்சமென்றேன் தொண்டமாநத்த மேவும்
தண்டாயுத பாணியே யென்துணையாய் வாவா.

6 சீலமுள இடும்பனு முன்காவல் கார்க்க
சிறந்தலக்ஷ்ச நவவீரர் சுத்திரிற்க
வாலைமனேன்மணித் தாயார் வேலுந்தாங்கி
வள்ளிதெய்வயானை யிருபுரத்தில்சூழ
காலமதில் செஞ்சேவல் கொடியுந்தாங்கி
கடையேனை யாண்டிடுக மயிலிலேறி
தாலமதில் தொண்டமாநத்த மேவும்
தண்டாயுத பாணியே யென்துணையாய் வாவா.

---

## கட்டளை கலிப்பா.

1 அண்டர் போற்றிடு மண்ணலே வந்தருள்
ஆறுமாமுக வய்யனே வந்தருள்
கண்டுபோற்ற கடையேன் முன் வந்தருள்
கருணை தந்தெனை கார்த்திட வந்தருள்
பண்டுமாவினை தீர்த்திட வந்தருள்
பழனிவாழும் பராபரா வந்தருள்
தொண்டமாநகர் மேவிய தேவனே
ஜோதி தண்டாயுதபாணி வந்தருள்

2 கந்தவேளாங் கருணையே வந்தருள்
கண்ணீராறுடை கர்த்தனே வந்தருள்
இந்தவேளை எளியேன்முன் வந்தருள்
ஏழைபேரி லிரங்கியே வந்தருள்
செந்தமிழ்க்குரு தேசிகா வந்தருள்
தேவதேவனே சித்தனே வந்தருள்
சந்ததம் தொண்டமாநத்தம் வாழ்சிவ
தண்டபாணி தயாபரா வந்தருள்.

3 அன்னைசத்தி அழகுவேல் தாங்கிய
அப்பனே சுப்ரமண்யனே வந்தருள்
முன்னங்கொண்ட பலஜென்ம தீவினை
மூண்டதாயினும் நீக்கிட வந்தருள்
பின்னுஞ்சென்ம மெடுக்கினு முந்தனை
பேசுமாவரந் தந்திட வந்தருள்
என்னையாண்டிட்ட தோண்டமாநந்தம் வாழ்
எம்பிரான் தண்டபாணி வருகவே.

---

## போற்றி மாலை.

1 சரஹணபவனே போற்றி
சையொளிபவனே போற்றி
திரிபுரபவனே போற்றி
திகழொளிபவனே போற்றி
பரிபுரபவனே போற்றி
பவமொளிபவனே போற்றி
அரிதிருமருகா தண்ட
பாணியே போற்றி போற்றி.

2 கந்தனே போற்றி போற்றி
கருணைவாரிதியே போற்றி
அந்திரதேவர் போற்றும்
அறுமுகா போற்றி போற்றி
மைந்தனிவ் வேழைமீது
மனமது யிரங்கியாண்ட
சுந்திர தண்டபாணி
ஜோதியே போற்றி போற்றி.

3 வேலனே போற்றி போற்றி
விமலனே போற்றி போற்றி
நீலமா மயிலிலேறும்
நித்தனே போற்றி போற்றி
பாலகன்துயரை தீர்க்க
பராபரனாகி நின்று
சாலவேயாண்டு கொண்ட
தண்டாயுதா போற்றி போற்றி.

4 அப்பனே போற்றி போற்றி
அந்திரதேவர் போற்றும்
செப்புதற் கரியதான
தெய்வமே போற்றி போற்றி
இப்புவி துன்பம் தீர்த்து
ஏழையை யாண்டுகொண்ட
தப்பிலா தொண்டநத்த
தண்டாயுதா போற்றி போற்றி.

5 இடும்பனை யடக்கி யாண்ட
இறைவனே போற்றி போற்றி
கடம்பனே கார்த்திகேய
காங்கையா போற்றி போற்றி
நடமிடும் மயிலிலேறி
நாளுமே யன்பராளும்
தடமெனும் தொண்டநத்த
தண்டாயுதா போற்றி போற்றி.

6 குமரனே போற்றி போற்றி
கூத்தனார் விழியிற்றோன்றி
அமரர்கள் துயரை தீர்த்த
அய்யனே போற்றி போற்றி
தமரர்கள்தந்தை சுற்றம்
சகலமும் நீயேஎன்று
உமதடிபோற்றி செய்தேன்
ஓடிவா போற்றி போற்றி.

---

## வருகை ஆனந்த களிப்பு.

1 வாவா தொண்டநகர்த ன்னில் — மேவி
வாழ்ந்திடுந் தண்டாயுதபாணி — தேவா
பாவால்மலர் மாலைசூட்டி — உனை
பாடியே போற்றிட ஓடியே நேர்த்தி — (வா)

2 சல்லடங் கச்சையுங்கட்டி — சூலம்
தடிகொண்டு மிதியடி தன்னையும் — மாட்டி
எல்லையில் விளையாடி கிட்டி — முன்னம்
இடும்பனுங் கட்டியங் கூறிடவே ஓட்டி — (வா)

3 வீரர்லக்ஷசம் பேருமெல்லை சுத்தி காவல்
விரைவுடனே செய்திடவே நவவீரர் பத்தி
சீரான ஏவலெலாம் செய்ய தேவ
தேவரெலாம் போற்றிதுதி சாற்றிமிக நைய்ய (வா)

4 கோடிமீதுசேவலது நின்று மிக
கொக்கரித்தே சிரகடித்துவிளை யாடி
அடவுடன் கூவபயங்கொண்டு அண்டர்
அரகராகாரென்று திருவடியில் வீழ்க (வா)

5 சத்துருசங்கார வேலிலங்க வள்ளி
தையலுடன் தெய்வானை பையவே துலங்க
சித்திரமயிலேறியே விளங்கி இங்கு
தெரிசனந் தந்திடவே வந்திடுநீ தங்கி (வா)

6 சரஹணைதனி லுதித்துவந்து சத்தி
சங்கரி கார்த்திகைப்பெண் தனவமுர்த முண்டு
பிரவணம் பரமருக் குரைத்து சிவ
பெருமானின் குருநாதரென்றும் பேர்தரித்து (வா)

7 ஒருமாங் கனிக்காக ஓடி இந்த
உலகமெலாம் சுத்தியே நீவந்திடுக நத்தி
கரிமாமுகன்பெறவே பற்றி அன்று
கையில் தெண்டுடனெழுந்த அய்யனல்லோசற்று ()

8 குரவள்ளிநாதனே நீவாவா எங்கள்
குமரப்பனே இந்தசமயமதில் வாவா
அறுமுகநாதனே நீவாவா முன்னம்
ஆனந்தமாகவே நீதானிங்கு வாவா (வா)

---

## * இடும்பன் ஆசிரிய விருத்தம்.

1 சல்லடங்கச்சையும் தடியுமிதியடியுடன்
 தாண்டியே வுலகமெல்லாம்
தாம்தாம்தீம்தீம் தகதகெனவென்றூடும்
 சத்துருசம்மார துரைநீ

---

* இடும்பன் ஆசிரியவிருத்தம் 3-ம், அம்பலவாணன் பேட்டை, நாயுடு அவர்களால் இயற்றியது.

இல்லறந்தன்னிலே இருக்கின்ற எங்களை
இடருகள் செய்யவென்று
ஏவல்பில்லிசூன்யம் எவர்கள்செய்திட்டாலும்
எடுத்தெறிந் தெனையாளவா
சொல்லிலேவஞ்சகம் நெஞ்சுதனில்வைத்துமே
துன்பஞ்செய் சதிகாரனை
துணைஎன்று நம்பியே வந்தனன் எந்தனிட
துணையாகநீ வருகுவாய்
அல்லிலும் பகலிலும் அனுதினமுமுனை நம்பி
அலைகிறேனருள் புரிகுவாய்
அப்பனே ஒப்பிலா சுப்பிரமண்ய சேஷ
அழகு இடும்பேச துரையே.

2. இரவுபகலனு தினமுன் பரமார்த்த தரிசனம்
எப்போது தருகுவாயோ
ஏழையானுன தடிமையாகியு மிருக்கவும்
எத்துன்பம் தான்வருகுமோ
தருணமெதுவாகிலும் சாமமோ ஏமமோ
தானெந்த நேரமதிலோ
தங்கிடுமிடத்திலோ இங்கையோஎங்கையோ
தளருமெச் சமயமதிலும்
வருகுவாய் வருகுவாய் அறுமுகர்தூதனே
வல்லிடும்பேச துரையே
வரவேணு மிதுசமயம் அருகினிலிருந்துமே
வல்வினையை தீர்த்து என்றும்
மரலிமுதல் தூதர்க்கும் மற்றமுனி பேய்கட்கும்
மாற்ருன் வஞ்சனை கட்குமென்
மனமது கலங்காமல் வந்தென்னை யாட்கொள்ள
மாஇடும் பேசன்வரவே.

3. வல்லிடும்பா வென்று நான் வாய்விட்டு அலரிடநீ
வாரா திருக்கலாமோ நான்
வாதனைப் படுவது நீதியோவுமக்கு
வரவேணு மிதுசமயமே
அல்லல் தொல்லைப்படும் வினைகளை யகற்றிஎனை
ஆதரித்தருளுள் புரிகுவாய்
அய்யனே மெய்யனே ஆறுமுகவேலவர்க்
கன்பான கெம்பீரனே

கொல்லென்று வந்திடும் பேய்பிர்மராக்ஷதர்
 கூட்டத்தி லோடிவந்து
குத்துவாய் வெட்டுவாய் குடல்யீரல் வேறதாய்
 குறுக்கே நறுக்கிவிடுவாய்
பல்லைப் பிடுங்கியே பார்தனில் போட்டுமோ
 பக்ஷசம்வைத் தெனையாளுவாய்
பரமசிவ சண்முகற் கன்பான தேவனே
 பக்கம்வா இடும்பேசனே.

---

## இடும்பன் ஆனந்தகளிப்பு.

1 தொண்டமாநத்தநகர் வாழும் எங்கள்
சண்டாயுதக் கடவுள் தொண்டான தூதா
துரை இடும்பா இங்கு வாவா இப்போ
தோத்தரித்தோ முன்னில் பாத்திடுக வாவா (தொ)

2 அண்டாதி தேவர்கள் துதிக்கும் ஸ்ரீ
ஆறுமுகசுவாமியின் தன் பேர்பெருகும் சிஷ்யா
ஆனந்த மாகஇங்கு வாவா இந்த
அடியாரை கார்த்திடுக நொடிதனிலே வாவா (தொ)

3 விரித்த செஞ்சடையாட வாவா உன்
வெண்புலித்தோலாசனமும் துன்னிமிகவாவா
தரித்த வெண்ணீர்காண வாவா நெற்றி
சந்தண குங்குமபொட்டு நன்னையமாய் வாவா (தொ)

4 முருக்குமீசையுடனே வாவா உந்தன்
முகத்தில்சிங்கப்பல்லுடன்ஜெகந்துதிக்கவாவா
இருகாதில் நாகபாசந்துன்ன வாவா
இனிய கழுத்தில் பதக்க மின்னிடுக வாவா (தொ)

5 ஒருகையில் திரிசூலமுடனே மற்
றொருகையில் சுக்குமாந்தடியுடனே வாவா
பெருமை பெருகாவியிடை காண இன்னும்
பேசிடும் கருப்பு கச்சை காவிசல்லடமுடன் (தொ)

6 கடம்பாய கங்காள சுரூபா உனை
கண்டிடதுதிக்குமென் முன்மண்டியிட்டுவாவா
வடமேருபுயவழகு வீரா இங்கு
வந்துமே நடனஞ்செய்ய சுந்திரமாய் வாவா (தொ)

7 சிவ சத்திமலை காவடிசெய் தீரா வரும்
சீரான நாகம்புய தண்டைகாண் நல்மாரா
பவந்தீர்த்து ஆண்டிடும் விநோதா குக
பன்னிருகரன் சன்னதி முன்னவனே வாவா (தொ)

8 அசுரகுல துஷ்டனே நீ வாவா வெகு
அனேககோடி பூதகண சேவிதனே வாவா
திசைபுகழும் துஷ்டசம்மாரா மிகு
சிஷ்டபரிபாலனுயா கஷ்டந்தீர்க்க வாவா (தொ)

---

## இடும்பன் சத்துருசம்மாரம் விருத்தம்.

பாங்காகவே உனை பாரினில் போற்றிடும்
பாலனும் எந்த னுக்கு
தீங்காகவே வஞ்சகஞ் சூது செய்துன்னை
சிந்தியா மூடர்தம்மை
தாங்கிடும் சுக்குமாந்தடி திரிசூலமதால்
சதைத்தவர் மூளைசிதரி
ஓங்கார ஆங்கார ரீங்கார மாகவே
ஓடிவா இடும்பதுரையே.

## வாழி.

தொண்ட மாநக ரேக தந் தாயனும்
தண்டபாணி யரனுமை தன்னுடன்
விண்டுவாணி யிடும்பனும் பாவலர்
பண்டு செந்தமிழன்பரும் வாழியே.

ஸ்ரீ தண்டாயுதபாணி அருட்பாமாலை.

முற்றும்.

---

## ராகு குளிகை எமகண்டன் காலன் அர்த்தப்பிரகர்ணன் காலத்தை குறித்தெழுதிய இவர்கள்

### ஆசிரிய விருத்தம்.

* சொல்லுமூணேமுக்கால் நாழிகை தள்ளியே
சோமனூர் சனிசுக்கிரன்
சுத்தமாய் புதன்குரு அங்காரகன் கதிர்
தோன்றிடும் ராகுகாலம்
அல்ல சனிமுதலாக ஞாயிர்வரை குளிகனும்
அரசன்முதல் வெள்ளிவரையும்
ஆகாத எமகண்டன் அர்த்தப் பிரகர்ணனே
அது புதன் வியாழன் வரையும்
நல்லொளி ஞாயிர்முதல் திங்கள்வரை காலனும்
நவிலுமதிலே இரவதில்
நாளுமே எமகண்டன் காலமாம் இதுவெலாம்
நாடியே கீழ்மேலதாய்
தள்ளியே பாாத்திடுவர் சண்முகா வுனைநம்பில்
சாருமோ இவர்கள் கொடுமை
சத்தியமிகு தொண்டமாநத்த நகர்வாழ்ந்திடும்
தண்டாயுதக் கடவுளே.

---

* இதை காணுவது எப்படி எனில் காலே மூணேமுக்கால் நாழிகை அதாவது (1½:மணி) காலே 7-30-க்குமேல் 9-வரை திங்கள் கிழமையும் காலே 9-முதல் 10-30-வரை [சனி]க்கிழமையும் 10-30-முதல் 12-வரை வெள்ளிக்கிழமையும் 12-முதல் மாலே 1-30-வரை புதன்கிழமையும் 1-30-முதல் 3-வரை வியாழக்கிழமையும் 3-முதல் 4-30-வரை செவ்வாய்கிழமையும் 4-30-முதல் மாலே 6-0-வரை ஞாயிற்றுக் கிழமையும் ராகுகாலமாகும். சனிமுதலாக ஞாயிர்வரை குளிகன் என்றால் எப்படி எனில் அடியிற் சொல்லியபடி கீழ்மேலதாக அதாவது சனிக்கிழமையில்

காலை 6-முதல் 7-30-வரையும் வெள்ளிக்கிழமை 7-30-முதல் 9-0-வரையும் வியாழனில் 9-முதல் 10-30-வரையும் புதனில் 10-30-முதல் 12-வரையும் இப்படியே கீழ்மேலதாக ஞாயிர்வரை பார்க்க குளிகன் வேளைதெரிந்துக் கொள்ளலாம். இப்படியே மற்றவைக்கும் காட்டி இருக்கும் கிழமைப்படி கீழ்மேலதாக பார்த்துக் கொள்ளலாம். ஞாயிர்-முதல் திங்கள்-வரை சொல்லிய காலன்வேளையே இரவில் எமகண்டனுக்கும் ஆகும் என்பதாம்

இந்த பாசுரம் சில நேயர்கள் ஷை வேளைகளை காண அனுகூலமாக இருக்குமென கேட்டுக்கொண்டபடி தியதாகும்.

M. K. கோவிந்தசாமி.

---

இப்புத்தகம் தேவையான அன்பர்கள்,

கூடலூர். O. T. சேடப்பாளையத்தில் மளிகை

&. புக்ஷாப் வைத்திருக்கும்

M. K. ஜம்புலிங்க படையாக்ஷி,

இடத்திலும், தோண்டமாநத்தம் ஸ்ரீ தண்டாயுதபாணி

சுவாமி கோவிலில் இருக்கும் புக்ஷாப்,

M. K. கோவிந்தசாமி படையாக்ஷி,

இடத்திலும் இலவசமாய் பெற்றுக்கொள்ளலாம்.

இதற்குமுன் வெளிவந்த ஸ்ரீ தண்டாயுதபாணி தியானங்கள்

1-வது பாகமும் கிடைக்கும்.

170103

ஸ்ரீ பாரதி பிரஸ், சூளை, சென்னை.